### எபேசியர் 6:11

அலகையின் வஞ்சகத் தந்திரங்களை எதிர்த்து நிற்கும் வலிமை பெறும்படி கடவுள் தரும் படைக்கலங்களை அணிந்து கொள்ளுங்கள்.

### சங்கீதங்கள் 31:7

ஆண்டவரே, நீர் எனக்கு அடைக்கலமாய் உள்ளீர், இன்னல்கள் அனைத்தினின்றும் என்னைக் காத்தருள்வீர்: உம் மீட்பால் வரும் மகிழ்வாலே என்னை அணைக்கின்றீர்."

### சங்கீதங்கள் 45:1

கடவுள் நம் அடைக்கலமும் பலமுமாயிருக்கிறார்: நெருக்கடி நேரத்தில் நமக்கு உறுதுணையென நன்கு காட்டியுள்ளார்.

### எபிரேயர் 13:6

இதனால் நாம் துணிவோடு "கடவுளே எனக்குத் துணை, அஞ்சேன், மனிதர் எனக்கு என்ன செய்யமுடியும்?" என்று சொல்ல முடியும்.

### உப ஆகமம் 31:6

துணிவு கொண்டு மனத்தைரியமாய் இருங்கள். அவர்களைப் பார்த்து அஞ்சவும் திகைக்கவும் வேண்டாம். ஏனென்றால், உன் கடவுளாகிய ஆண்டவரே உன்னை நடத்துபவர். அவர் உன்னை விட்டு நீங்கப்போவதுமில்லை; உன்னைக் கைவிடுவதுமில்லை என்றார்.

### சங்கீதங்கள் 17:35-36

பாதுகாப்புத் தரும் உம் கேடத்தை நீர் எனக்கு அளித்தீர்: உமது வலக்கரம் என்னை ஆதரித்தது; நீர் என்னிடம் காட்டிய பரிவு நான் மாண்புறச் செய்தது. நான் செல்லும் வழியை நீர் விசாலமாக்கினீர்: என் கால்களும் தளர்வுறவில்லை.

### இசையாஸ் ஆகமம் 54:17

உனக்கு விரோதமாய்த் தயாரிக்கப்பட்ட படைக்கலம் உன்மேல் பயன்படுத்தப்படாது; உனக்குத் தண்டனை விதிக்க வழக்காடும் நாவை நீயே கண்டனம் செய்து அடக்கி விடுவாய். ஆண்டவருடைய ஊழியர்களின் உரிமைச் சொத்தும் அவர்களுக்கு எம்மிடம் கிடைக்கும் நீதியும் இதுவே, என்றார் ஆண்டவர்.

சங்கீதங்கள் 15:1

இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடன் நான் அடைக்கலம் புகுந்தேன்.

யாத்திராகமம் 14:14

ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார். நீங்கள் பேசாதிருங்கள் (என்றுரைத்தார்).

சங்கீதங்கள் 117:6

ஆண்டவர் என் பக்கம் இருக்க நான் ஏன் அஞ்ச வேண்டும்? எவன் எனக்கு என்ன செய்ய முடியும்?

பிலிப்பியர் 4:13

எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.

சங்கீதங்கள் 118:114

நீரே என் பாதுகாப்பு, நீரே என் கேடயம்: உம் வார்த்தையின் மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இசையாஸ் ஆகமம் 46:4

நீங்கள் முதுமையடையும் வரையில் நாம் மாறமாட்டோம், உங்கள் தலை நரைக்கும் வரை உங்களைத் தூக்கிச் செல்வோம்; நாமே படைத்தோம் நாமே உங்களைத் தாங்கினோம், நாமே தூக்கிப் போவோம், உங்களை விடுவிப்போம்.

பழமொழி ஆகமம் 4:23

உன் இதயத்தை எவ்வித எச்சரிக்கையுடனும் பாதுகாத்துக் கொள்; ஏனென்றால், வாழ்வே அதனின்றுதான் புறப்படுகின்றது.

சங்கீதங்கள் 15:8

ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்: அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன்.

சங்கீதங்கள் 17:30

கடவுள் காட்டும் வழி குற்றமற்றது, ஆண்டவருடைய வாக்குறுதி புடமிடப்பட்டது: அவரிடம் அடைக்கலம் புகுவோரனைவருக்கும் அவரே கேடயம்.

சங்கீதங்கள் 58:16

நானோ உமது வல்லமையைப் புகழ்ந்து பாடுவேன்: காலை தோறும் உமது இரக்கத்தை நினைத்து அக்களிப்பேன். ஏனெனில், நீரே எனக்கு அரணாயிருக்கிறீர். நெருக்கிடையான வேளையில் எனக்கு அடைக்கலமாயிருக்கிறீர்.

சங்கீதங்கள் 3:3

ஆனால், ஆண்டவரே, என்னைக் காப்பவர் நீரே: எனக்குப் பெருமை தருபவர் நீரே; நான் தலை நிமிரத் துணை செய்பவர் நீரே.

உரோமையர் 8:31

இதற்குமேல் நாம் என்ன சொல்வது? கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நம்மை எதிர்த்து நிற்பவர் யார்?

பழமொழி ஆகமம் 30:5

கடவுளின் வார்த்தை நெருப்பினால் (பரிசுத்தப்) பட்டது. அதை நம்பி இருக்கின்றவர்களுக்கு (அது) கேடயமாம்.

சங்கீதங்கள் 117:8

மனிதன் மீது நம்பிக்கை வைப்பதை விட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்.

இசையாஸ் ஆகமம் 1:17

நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; நீதியைத் தேடுங்கள், ஒடுக்கப்பட்டவனுக்கு உதவி செய்யுங்கள், திக்கற்ற பிள்ளைக்கு நீதி வழங்குங்கள், கைம்பெண்ணுக்காக வழக்கு நடத்துங்கள்.

பழமொழி ஆகமம் 18:10

ஆண்டவரின் திருப்பெயர் மிகவும் வலுவுள்ள கோபுரமாம். நீதிமான் அதனிடம் ஓடுகிறான். அதனால் அவன் உயர்த்தவும் படுவான்.

சங்கீதங்கள் 33:22

தம் ஊழியரின் ஆத்துமங்களை ஆண்டவர் மீட்கிறார்: அவரிடம் அடைக்கலம் புகுபவன் எவனும் தண்டனையடையான்.

2 சாமுவேல் ஆகமம் 22:32

ஆண்டவர் அன்றி வேறு கடவுள் யார்? நம் கடவுளைத் தவிர வல்லபமுள்ளவர் யார்?